# භාණ්ඩාගාර මෙහෙයුම් දෙපාර්තමේන්තුව
# திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்
# Department of Treasury Operations

මුදල් හා ක්‍රමසම්පාදන අමාත්‍යාංශය,මහලේකම් කාර්යාලය,
තැ.පෙ.1559, කොළඹ 01, ශ්‍රී ලංකාව.

நிதி திட்டமிடல் அமைச்சு, செயலகம்,
தபெ. 1559, கொழும்பு 01, இலங்கை

Ministry of Finance & Planning, The Secretariat,
P.O.Box: 1559, Colombo 01. Sri Lanka.

අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் நாயகம் / Director General: 0094112484729, dgto@tod.treasury.gov.lk

ෆැක්ස් / பெக்ஸ் / Fax: 0094 112 484970

පොදු / பொது / General: 0094 112 484500, 0094 112 484600


මගේ අංකය / எனது இல / My No.: TO/REV/M2/07/2010

ඔබේ අංකය / உமது இல / Your No.:

දිනය / திகதி / Date: 2014.12.31

**திறைசேரி செயற்பாட்டுச் சுற்றறிக்கை இலக்கம் : 06/2014**

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
மாவட்டச் செயலாளர்கள் அனைவருக்கும்,

**2014.06.30 அன்றுள்ளவாறு நிலுவை வருமான அறிக்கை.**

அரசிறைக் கொள்கைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட இலக்கம் : 01/2002 மற்றும் 2002.07.17 ஆம் திகதிய சுற்றறிக்கை மற்றும் அதன் மீதான திருத்தங்கள் தொடர்பில் தங்களது மேலான கவனம் ஈர்க்கப்படுகிறது.

02. அதற்கமைய, வருமனக் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் நி.பி.128(2)(இ) இலுள்ள ஏற்பாடுகளுக்கமைய தமது பொறுப்பின் கீழுள்ள வருமானக் குறியீடுகளுக்கு அமைய நிலுவை வருமானக் கணக்கு அறிக்கையினை ஆறு மாதங்களுக்கு ஒருமுறை கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பித்தல் வேண்டும். திறைசேரி செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகம் அவர்கள் கணக்கீட்டு உத்தியோகத்தர் என்ற வகையில் பின்வரும் வருமானக் குறியீட்டு இலக்கங்களின் கீழ் ஒன்று திரட்டப்படுகின்ற நிலுவை வருமானம் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரினால் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை சமர்ப்பிக்கப்படுகின்ற தகவல்களை திரட்டி நிலுவை வருமானக் கணக்கு அறிக்கை தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் நாயத்திடம் சமர்ப்பிக்கப்படுகின்றது.

| **வருமான குறியீடு** | **விபரம்** |
|---|---|
| 20.02.01.01 | அரசாங்க சொத்துக்களில் இருந்து கிடைக்கப் பெறும் வருமானம் - அரசாங்க கட்டிட வாடகை |
| 20.02.01.99 | அரசாங்க சொத்துக்களில் இருந்து கிடைக்கப் பெறும் வருமானம் - ஏனைய வாடகைகள். |
| 20.02.02.99 | வட்டி – ஏனையவை |
| 20.03.01.00 | விற்பனை மற்றும் கட்டணங்கள் - திணைக்கள விற்பனைகள் |
| 20.03.02.99 | விற்பனை மற்றும் கட்டணங்கள் - நிருவாகக் கட்டணங்கள், கொடுப்பனவுகள் - நானாவித |
| 20.03.03.00 | விற்பனை மற்றும் கட்டணங்கள் - தண்டப் பணமும் அரச உடமையாக்கல்களும் |
| 20.03.99.00 | விற்பனை மற்றும் கட்டணங்கள் - ஏனைய பெறுகைகள் |
| 20.05.99.00 | நடைமுறை மாற்றல்கள் - தேசிய லொத்தர் சபையும் ஏனைய மாற்றல்களும் |
| 20.06.02.00 | மூலதன வருமானங்கள் - மூலதனச் சொத்துக்களின் விற்பனை |

03. ஆகவே, மேற்குறித்த வருமானக் குறியீட்டு இலக்கங்கள் ஒவ்வொன்றுடனும் தொடர்புற்ற சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பனவற்றிற்கு அமைய, வருமான குறியீட்டு இலக்கங்களுக்கான நிலுவை வருமானம் கணக்கு அறிக்கைகளுடன் முறையாக ஒப்பீடு செய்யப்பட்டு அரசிறைக் கொள்கை சுற்றறிக்கை இலக்கம் : 01/2002 மற்றும் அதன் மீதான திருத்தங்கள் மூலம் காட்டப்பட்டவாறான மாதிரிப் படிவம் இல TOD/REV/01 க்கு அமைய தயாரிக்கப்பட்ட 2014.06.30 அன்றுள்ளவாறான நிலுவை வருமானக் கணக்கு அறிக்கையினை 2015.01.19 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பணிவாய் வேண்டிக்கொள்கிறேன். குறித்த தினத்தன்று நிலுவை வருமானங்கள் ஏதும் இல்லாத பட்சத்தில் தயவு செய்து வெற்றுக் கணக்கு அறிக்கை ஒன்றினை சமர்ப்பிக்கவும்.

04 . மேலும் , ஒவ்வொரு ஆண்டுடனும் தொடர்புபற்ற நிலுவை வருமானத்திற்கு நேரொத்த வகையில் 2014 ஆம் ஆண்டில் திரட்டப்பட்ட வருமானங்கள் தொடர்பான விபரங்கள், அக்காலப்பகுதியினுல் நி.பி. 113 க்கு அமைய திறைசேரியினால் வழங்கப்பட்ட ஒப்புதலுக்கு அமைய விடுவிக்கப்பட்ட ஒவ்வொரு வருமானம் சம்பந்தமான விபரங்கள் என்பனவும் மாதிரிப் படிவம் இல TOD/REV/02 என்ற படிவத்திலும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

**ஒப்பம்/எம்.எஸ்.டீ. ரனசிறி**
**பணிப்பாளர் நாயகம்**
**திறைசேரி செயற்பாட்டுகள் திணைக்களம்**

பிரதிகள் : 1. கணக்காய்வாளர் நாயகம்.
2. பணிப்பாளர் நாயகம், அரசிறைக் கொள்கைகள் திணைக்களம்.

இணைப்பு : TOD/REV/01

# 2014.12.31 ஆந் திகதியன்று நிலுவை வருமானம்

(i) சட்டம் / அதிகாரம் :- (தொடர்புடைய சட்டவாக்கங்கள் அல்லது சுற்றுநிருப அறிவுறுத்தல்கள்) ……………………………

(ii) சட்டம் / அதிகாரம் :- (சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் / திணைக்களங்கள் அல்லது நிறுவனங்கள்) ……………………………

(iii) வருமான வகை:- ……………………………

(iv) வருமானப் குறியீட்டு இலக்கம் :- ……………………………

| விபரம் | நிலுவை வருமானம் | | | | | நிலுவைக்கான காரணம் | நிலுவைத் தொகையினை மீள அறவிடுவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை | நிலுவைத் தொகையினை மீள அறவிடுவது தொடர்பிலான மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2011.12.31 வரையான திரட்டிய நிலுவை<br>ரூபா. | 2012 ஆம் ஆண்டிற்கான நிலுவைத் தொகை<br>ரூபா. | 2013 ஆம் ஆண்டிற்கான நிலுவைத் தொகை<br>ரூபா. | 2014.06.30 ஆந் திகதி வரையான நிலுவைத் தொகை<br>ரூபா. | 2014.06.30 ஆந் திகதி வரையான மொத்த நிலுவைத் தொகை (2+3+4+5)<br>ரூபா. | | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |

2014.06.30 திகதியன்று சமர்ப்பிக்கப்பட்ட நிலுவை வருமான அறிக்கை மூலம் இந்நிரல்களின் கீழ் அறிக்கையிடப்பட்ட ஒவ்வொரு நிலுவை வருமானங்களும் மேலே உள்ள அட்டவணையின் நிரல் இலக்கம் 2- 5 வரையும் 2014 ஆம் ஆண்டில் அறவீடுகள் ஏதும் இருப்பின், அவை கழிக்கப்பட்டு பின்னர் கிடைக்கப் பெறும் மீதியோடு இந்நிரல்களின் கீழ் காட்டப்படும் கூட்டுத் தொகையும் சமப்படுதல் வேண்டும். அவ்வாறின்றேல், குறித்த வேறுபாட்டிற்குறிய விரிவான விளக்கம் இணைப்பாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

திகதி:…………………… மேற்குறிப்பிடப்பட்ட தகவல்கள் யாவும் சரியானதென உறுதிப்படுத்துகிறேன்

……………………………………………

செயலாளர்/திணைக்களத் தலைவர்/மாவட்டச் செயலாளர்

இணைப்பு : TOD/REV/02

# 2014.12.31 இல் இருந்தவாறான அரசிறை தளர்த்தீடுகளின் கூற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசிறைத் தளர்த்தீடுகளும்

அமைச்சு/ திணைக்களம் :

வருமான குறியீட்டு இலக்கம் :

| விபரம் | 2014 ஆம் ஆண்டில் நிலுவை வருமானத்தினைத் திரட்டுதல் | | | | * 2014ஆம் ஆண்டில் நிலுவை வருமானத்தினை விடுவித்தல் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 2011.12.31 வரைக்குமான | | 2012 வரைக்குமான | | 2013 வரைக்குமான | | |
| | 2011.12.31 ஆந் திகதி வரையான நிலுவைகளின் திரட்டு * ரூபா. | 2012 ஆண்டு வரையான நிலுவைகளின் திரட்டு * ரூபா. | 2013 ஆண்டு வரையான நிலுவைகளின் திரட்டு * ரூபா. | மொத்த நிலுவைத் தொகை (2+3+4) ரூபா. | நிலுவைத் தொகையினை விடுவித்தல் ரூபா. | நி.பி 113 ற்கு அமைய விடுவிப்புச் செய்ய பொதுத் திறை சேரியினால் வழங்கப்பட்ட ஒப்புதல் கடிதத்தின் மேற்கோள் இலக்கமும் திகதியும் | ஆண்டில் நிலுவைத் தொகைக்கு அமைவான மொத்த விடுவிப்புகள் ரூபா. | நி.பி 113 ற்கு அமைய விடுவிப்புச் செய்ய பொது திறை சேரியினால் வழங்கப்பட்ட ஒப்புதல் கடிதத்தின் மேற்கோள் இலக்கமும் திகதியும் | ஆண்டில் நிலுவைத் தொகைக்கு அமைவான மொத்த விடுவிப்புகள் ரூபா. | நி.பி 113 ற்கு அமைய விடுவிப்புச் செய்வதற்கு பொது திறை சேரியினால் வழங்கப்பட்ட ஒப்புதல் கடிதத்தின் மேற்கோள் இலக்கமும் திகதியும் ரூபா. | நிலுவைத் தொகைக்கு அமைய விடுவிக்கப்பட்ட மொத்த தொகை (8+9+10) ரூபா. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) |
| | | | | | | | | | | | |

* குறிப்பு : வருமான குறியீட்டு இலக்கம் ஒவ்வொன்றின் கீழும் வரும் ஏதேனுமொரு வருமானத்தினை விடுவிப்பதற்காக நி.பி. 113 க்கு அமைய பொது திறைசேரியின் முன் அனுமதி பெறப்படுதல் வேண்டும். ஆதலால், பொதுத் திறைசேரி (அரச நிதி திணைக்களம்) ஆல் விடுவிப்புச் செய்வதற்கு பெறப்பட்ட ஒப்புதல் இங்கு குறிப்பிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்காகப் பெறப்பட்ட ஒப்புதல் கடிதத்தின் பிரதி ஒவ்வொன்றும் இத்தோடு இணைக்கப்படுதலும் வேண்டும்.

திகதி:......................

மேற்குறிப்பிடப்பட்ட தகவல்கள் யாவும் சரியானதென உறுதிப்படுத்துகிறேன்

.........................................................

செயலாளர்/திணைக்களத் தலைவர்/மாவட்டச் செயலாளர்